

# தி.மு.க. இளைஞர் அணி

கழகத்தில் உள்ள முன்னோடிகள், மாற்றுத்திறனாளிகள், மருத்துவம் – கல்வி உதவி தேவைப்படுவோருக்கு உதவித்தொகை வழங்கிடும் வகையில், கழக இளைஞர் அணி அறக்கட்டளைக்குப் பலரும் நிதி அளித்து வருகின்றனர். அந்த வகையில், மாவட்ட, மாநில, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தின்போது நிதி உதவி வழங்கியவர்களின் விவரம் வருமாறு:–

| வ. எண் | பெயர், பொறுப்பு, கழக மாவட்டம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | பா.நவலடி ராஜா, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், நாமக்கல் மேற்கு மாவட்டம். | 1,00,000 |
| 2 | டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், பெரம்பலூர் மாவட்டம். | 25,000 |
| 3 | கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், கோவை தெற்கு மாவட்டம். | 25,000 |
| 4 | இரா.கிருஷ்ணகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், விருதுநகர் வடக்கு மாவட்டம். | 20,000 |
| 5 | மோரை மு.சதீஷ்குமார், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், சென்னை வடகிழக்கு மாவட்டம். | 20,000 |
| 6 | டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், பெரம்பலூர் மாவட்டம். | 10,000 |
| 7 | எவரெஸ்ட். என்.நரேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | 10,000 |
| 8 | ச.பாண்டியன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம். | 10,000 |
| 9 | ஆர்.சௌந்தர்ராஜன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மதுரை மாநகர் மாவட்டம். | 10,000 |
| 10 | சௌ.சர்வோதயன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மயிலாடுதுறை மாவட்டம். | 10,000 |
| 11 | வி.விமல், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மதுரை தெற்கு மாவட்டம். | 10,000 |
| 12 | சு.சண்முகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம். | 10,000 |
| 13 | எம்.விநாயகமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், சென்னை தெற்கு மாவட்டம். | 10,000 |
| 14 | அ.யுவராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். | 10,000 |
| 15 | டி.ஆர்.கிருஷ்ணராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், தென்காசி தெற்கு மாவட்டம். | 5,000 |
| 16 | கே.பி.எம்.மாயக்கண்ணன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம். | 5,000 |
| 17 | எம்.சேகர், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், விருதுநகர் வடக்கு மாவட்டம். | 5,000 |
| 18 | பனங்குடி. ஏ.எஸ்.குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், திருவாரூர் மாவட்டம். | 5,000 |
| 19 | டாக்டர் எஸ்.ஆர்.சந்திரசேகர், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தஞ்சாவூர் தெற்கு மாவட்டம். | 5,000 |
| 20 | ஆண்டோ சிரில் ராஜ், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். | 5,000 |
| 21 | பா.ஜெகன் பால்பாண்டியன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், விருதுநகர் வடக்கு மாவட்டம். | 5,000 |
| 22 | த.சஞ்சய்காந்தி, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். | 5,000 |
| 23 | வி.புஷ்பா வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | 5,000 |
| 24 | பெ.சீனிவாசன், மாநகர இளைஞர் அணித் துணை அமைப்பாளர், ஈரோடு மாநகரம். | 3,335 |
| 25 | கந்தர்வக்கோட்டை ஸ்டாலின், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம். | 3,000 |
| 26 | ப.ராஜேஷ்பெருமாள், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம். | 3,000 |
| 27 | ப.சுகுமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், காஞ்சிபுரம் மாநகரம். | 3,000 |
| 28 | டி.கே.கமலக்கண்ணன், நகர இளைஞர் அணி அமைப்பாளர், மறைமலைநகர் நகரம், செங்கல்பட்டு. | 2,500 |
| 29 | கோல்டு. டி.பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,500 |
| 30 | கு.மணிகண்டன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,500 |
| 31 | வழக்கறிஞர் மு.சிவக்குமார், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர் தென்காசி தெற்கு மாவட்டம். | 2,100 |
| 32 | ஏ.கே.இரமேஷ், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம். | 2,000 |
| 33 | டாக்டர் எம்.முஹமது அப்துல் ரஹீம், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தென்காசி தெற்கு மாவட்டம்.. | 2,000 |
| 34 | பி.ஆர்.வசந்த், ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திருப்பரங்குன்றம், மதுரை. | 2,000 |
| 35 | டிராக்டர் சரவணன், அலனி கிழக்குப் பகுதி இளைஞர் அணி, மதுரை தெற்கு மாவட்டம். | 2,000 |
| 36 | சே.அருண்குமார், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம். | 2,000 |
| 37 | வழக்கறிஞர் இன்சமாம் முல்ஹக், மாநகர இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தாம்பரம் மாநகரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,000 |
| 38 | வே.சுப்பிரமணியன், மாநகர இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தாம்பரம் மாநகரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,000 |
| 39 | ச.பிரபு, மாநகர இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தாம்பரம் மாநகரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,000 |
| 40 | இரா.தனபால், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், கோவை மாநகர் மாவட்டம். | 2,000 |
| 41 | டி.சின்னதுரை, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், நாங்குநேரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மாவட்டம். | 1,000 |
| 42 | த.மணிராஜன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் | 1,000 |
| 43 | மா.கார்த்திக், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், நாமக்கல் கிழக்கு மாவட்டம். | 1,000 |
| 44 | என்.ஜெகநாதன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மதுரை தெற்கு மாவட்டம். | 1,000 |
| 45 | பிரபு (எ) சுப்பிரமணிய பிரபாகரன், மாநில இளைஞர் அணித் துணை அமைப்பாளர், காரைக்கால் மாநிலம். | 1,000 |
| 46 | சி.கோபிநாத், 160-வது வட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், ஆலந்தூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 1,000 |
| 47 | டி.கே.ராஜ், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தென்காசி தெற்கு மாவட்டம். | 1,000 |
| 48 | ஜெ.மோகன்பாபு, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம். | 1,000 |
| 49 | அ.முகமது ரபீக், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம். | 1,000 |
| 50 | வி.எஸ்.முரளி, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், இராணிப்பேட்டை மாவட்டம். | 1,000 |
| 51 | உ.சித்திக் பாஷா, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், இராணிப்பேட்டை மாவட்டம். | 1,000 |
| 52 | இரா.கணேசன், மாநில இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மும்பை மாநிலம். | 1,000 |
| 53 | அ.ராஜதுரை, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மதுரை தெற்கு மாவட்டம். | 500 |
| 54 | துரை பிரவிண்குமார், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கோவை மாநகர் மாவட்டம். | 500 |
| 55 | சீ.அறிவழகன், மாநில இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மும்பை மாநிலம். | 500 |
| | மொத்தம் | 3,78,435 |

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 10–08–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



சென்னை, வாலாஜா சாலை சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (09.08.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### டிசம்பருக்குள் முடிவடையும்

# சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் விரைந்து நடைபெறுகின்றன!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேட்டி!

*சென்னை, ஆக.11-*

*சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரும்போது, சுற்றுலா பயணிகளுக்கு புதுப் புது அனுபவங்கள் கிடைப்பதுடன், உள்ளூர் மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடையும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.*

*சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர்கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (09.08.2023) நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது :*

*முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை மாநிலமாக முன்னேறி உள்ளது. தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். சுற்றுலா பயணிகள் மற்றும் இளைஞர்களுக்கு சாகச அனுபவங்களை தரும் வகையில் ஊட்டி, தருமபுரி மாவட்டம் வத்தல்மலை, ஏலகிரி மலை உள்ளிட்ட பகுதிகளில் சாகச சுற்றுலா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பழம்பெருமை வாய்ந்த துறைமுக நகரான பூம்புகார் (காவிரிபூம்பட்டினம் பழைய பெயர்) நகரத்தில் பூம்புகார் கலைக்கூடத்தில் புனரமைப்பு பணிகள் மற்றும் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒகேனக்கல், பிச்சாவரம் ஆகிய சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடிஅரித்ராநதி தெப்பக்குளம், ஈரோடு மாவட்டம் அந்தியூர் பெரிய ஏரி ஆகிய இடங்களில் படகு குழாம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. முட்டுக்காடு படகு குழாமில் 200 நபர்கள் அமரும் வகையிலான இரண்டு அடுக்குகள் கொண்ட மிதவை உணவக கப்பல் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் படகு குழாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள் அறிவிக்கப்பட்டு அதனை செயல்படுத்தும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.*

*சுற்றுலா தலங்களில் வளர்ச்சித்திட்டப்பணிகளை மேற்கொள்ளும் போது வாகன நிறுத்தும் இடம், சுகாதார வளாகம் அமைத்தல் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரும்போது, சுற்றுலா பயணிகளுக்கு புதுப் புது அனுபவங்கள் கிடைப்பதுடன், உள்ளூர் மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடையும்.*

*இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.*

*இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.லி.பாரதிதேவி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக திட்ட பொறியாளர், உதவி செயற்பொறியாளர்கள் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

### மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர்

# எல்.எஸ்.எஸ்.மோகன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 11–

தி.மு.கழக மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் எல்.எஸ்.எஸ்.மோகன் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தி.மு.கழக மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் எல்.எஸ்.எஸ்.மோகன் அவர்கள், நேற்று முன்தினம் (9.8.2023) இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயரும் அடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர், கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.